# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.32/2023

## அ.சா.12 (LW 14 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | முத்துப்பாண்டி | **தொழில்** | |
| க/பெ **பெயர்** | சின்னக்காளை | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **23.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2 ஆஜர்.

**<u>மொழிபெயர்ப்பாளர் திரு. அரவிந்தன் முன்னிலையில் பின்வருமாறு சாட்சிகளின் விசாரணை நடத்தப்பட்டது.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது முத்தனங்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை பார்த்துள்ளேன். ஆய்வாளர் அவர்களை விசாரிக்கும் போது பார்த்துள்ளேன். 27.08.2022 அன்று நானும் ரகுவேலும் வடமதுரைக்காக சொந்த வேலைக்காக சென்ற போது வடமதுரை காவல் ஆய்வாளர் வடமதுரை இபி ஆபீஸ் முன்பாக ஆய்வாளர் இரு நபர்களை கூப்பிட்டு விசாரித்துக் கொண்டிருந்தார். அப்போது சிபு என்பவர் ஆஜர் எதிரிகளை அடையாளம் காட்டினார். ஆஜர் எதிரிகளை ஆய்வாளர் விசாரித்தார். ஆஜர் எதிரிகளை விசாரித்த போது ஹிந்தி டீச்சரை வரவழைத்து ஹிந்தி மொழி பெயர்த்து எதிரிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்றார். அந்த வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்து கொண்டார். அந்த வாக்குமூலத்தில் நானும் ரகுவேலும் கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.8. ஆகும்.** அதன் பின்பு அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரிகள் சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆடைகளை எடுத்து ஆஜர் செய்வதாக கூறியதன் பேரில் எதிரிகளும், நாங்களும், சென்ற போது எதிரிகள் காவேரி மில் அருகே சென்ற போது எதிரிகள் எடுத்து ஆஜர் செய்த நிறம் தெரியாத காட்டினால் அடையாளம் காட்டுவேன் என சாட்சி சொல்கிறார், கருப்பு கலர் பேண்ட், கருப்பு வெள்ளை டிசைன் போட்ட அரைக்கை சட்டை ஒன்று , டார்க் புளூ கலர் லோயர் ஒன்று , கருப்பு கலர் லோயர் ஒன்று Niku –1 வெள்ளை , ஊதா, சிவப்பு, புளூ, மஞ்சள், கலர் பூ போட்ட அரைக்கை சட்டை –1 ஆஜர் செய்வதாக கூறினார். அத்தாட்சி **அ.த.சா.ஆ.9.** ஆகும். அத்தாட்சியில் நானும் ரகுவேலும் கையெழுத்து செய்தோம்.

கருப்பு கலர் பேண்ட், கருப்பு வெள்ளை டிசைன் போட்ட அரைக்கை சட்டை ஒன்று **சா.பொ. 4. ஆகும்.** டார்க் புளு கலர் லோயர் ஒன்று ,**சா.பொ. 5.** ஆகும். கருப்பு கலர் லோயர் ஒன்று Niku –1 **சா.பொ. 6.** ஆகும். வெள்ளை , ஊதா, சிவப்பு, புளு, மஞ்சள், கலர் பூ போட்ட அரைக்கை சட்டை –1 **சா.பொ. 7** . ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

என் சொந்த ஊர் முத்தனங்கோட்டை ஆகும். நான் ரியல் எஸ்டேட் புரோக்கராக இருந்து வருகிறேன். என்னுடன் ரகுவேல் வந்தார். அவரும் நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். நாங்கள் உறவினர்கள் அல்ல. ரகுவேல் குடும்ப நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொள்வது உண்டா என்றால் ஆமாம். அவரும் எனது வீட்டு விசேசங்களுங்கு வருவது உண்டு. இறந்து போன ராம்குமார் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். புகார்தாரரும் முத்தனங்கோட்டையை சேர்ந்தவர் ஆவார். புகார்தாரர் இறந்த ராம்குமாரின் சகோதரி ஆவார். ராம்குமார் காணாமல் போன விவரம் எனக்கு தெரியுமா என்றால் 26.08.2022 அன்றுதான் தெரியும். அன்று காலை 09.00 மணிக்கு மணிக்கு காவேரி மில் அருகே கூட்டமாக இருந்தது. நாங்கள் சென்று பார்க்கும் போது ராம்குமார் சடலமாக கிடந்தார். சம்பவ இடம் நான் போகும் போது ஊர்க்காரர்கள் ஒரு 50 பேர்கள் இருப்பார்கள். நான் சம்பவ இடம் செல்வதற்கு முன்பு பிரேதம் கிடந்த இடத்தில் யார், யார் இருந்தார்கள் என்று தெரியாது. கூட்டமாக இருந்தது. நான் போன சமயத்தில் போலிசார் வந்துவிட்டார்கள். எந்த போலிசார் என்று குறிப்பாக தெரியாது. நான் அநத் சமயத்தில் போலிசாரிடம் எதுவும் பேசவில்லை. ராம்குமாரின் அக்கா நான் சம்பவ இடம் போகும் முன்னரே அங்கு இருந்தார். ராம்குமாரின் அப்பாவும் , சாட்சி ரகுவேலும் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என தெரியாது. சாட்சி ரகுவேல்தான் புகார்தாரரின் கணவர் என்றால் சரிதான். ரகுவேல் இறந்து போன ராம்குமாரின் மைத்துனர் ஆவார். ரகுவேலும் , நானும் என்ன காரணத்திற்காக வடமதுரை சென்றோம் என்றால் உள்ளூர்வாசி என்பதால் சென்றோம். இறந்த ராம்குமார் வழக்கு தொடர்பாக போலிசார் விசாரிக்கிறார்கள் என்ற விவரம் தெரியும். வழக்கு தொடர்பாக 26.08.2022 அன்று காவல்நிலையம் சென்றேனா என்றால் இல்லை. வடமதுரை காவல்நிலைய போலிசார் எனக்கு அறிமுகமானவர்களா என்றால் இல்லை. நான் எந்த வாகனத்தில் அன்றைய தினம் வடமதுரைக்கு எந்த வாகனத்தில் ரகுவேலுடன் சென்றேன் என்றால் என் ஸ்பிளண்டர் வாகனத்தில் சென்றேன். வழக்கு தொடர்பாக ரகுவேலை போலிசார் என் முன்னிலையில் விசாரித்தார்களா என்றால் இல்லை. வடமதுரை இபி ஆபிசானது பைபாசிலிருந்து தேசிய நெடுஞ்சாலையிலிருந்தும் 50 மீட்டர் தொலைவில் உள்ளது. இபி ஆபிஸ் அருகே பஸ்ஸ்டாப் இல்லை. நான் போகும் போது அந்த இடத்தில் 5,6 பேர்கள் இருந்தார்கள். அப்போது எதிரிகளை பிடித்து வைத்திருந்தார்கள். அந்த 5,6 பேர்களில் போலிசார்காரர்கள் இருந்தார்களா என்றால் 45 பேர்கள் போலிசார் இருந்தார்கள். இன்ஸ்பெக்டர் வண்டி இருந்தது. எதிரிகள் இன்ஸ்பெக்டர் ஜீப்பில் இருந்தார்களா என்றால் இல்லை. எதிரிகள் அந்த சமயத்தில் என்னென்ன உடைகள் அணிந்திருந்தார்கள் என்று தற்போது ஞாபகம் இல்லை. இபி ஆபிஸ் அருகில் நான் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் ஞாபகம் இல்லை. சாட்சி பின்னிட்டு 15 நிமிடம் இருக்கும் என சொல்கிறார். அந்த 15 நிமிடம் என்னிடமோ, ரகுவேலிடமோ போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. அந்த இடத்தில்

என்னிடமோ, ரகுவேலிடமோ போலிசார் எழுதி கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. அந்த இடத்தில் எதிரிகள் இரண்டு பேரிடம் போலிசார் ஏதேனும் எழுதி கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. யாரேனும் எங்களை அந்த இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு அழைத்தார்களா என்றால் நாங்களாகத்தான் சென்றோம். அங்கிருந்து 10 நிமிடத்தில் காவல்நிலையம் சென்றோம். அப்போது மணி சுமார் 07.45 இருக்கும். அப்போது நிலையத்தில் போலிசார் இருந்தார்கள். யார், யாரென்று குறிப்பாக தெரியாது. ஹிந்தி மொழிபெயர்ப்பாளர் நிலையத்தில் நான் போகும் போதே இருந்தார். ஹிந்தி ஆசிரியர் எதிரிகளிடம் என்ன பேசினார், என்ன எழுதிக் கொண்டார் என்றால் ஹிந்தி ஆசிரியர் எதுவும் எழுதவில்லை. ஹிந்தி ஆசிரியர் சொல்லச் சொல்ல ஆய்வாளர் எழுதினார். அந்த அறையில் நிறைய போலிசார் இருந்தார்களா என்றால் ஹிந்தி ஆசிரியை, ஆய்வாளர், இரண்டு காவலர்கள், நான் இருந்தேன். எனக்கு ஹிந்தி தெரியாது. என்னென்ன கேள்விகள் கேட்டு ஆய்வாளர் எழுதினார் என்ற விவரம் தெரியாது. அந்த வாக்குமூலத்தை ஆய்வாளர்தான் எழுதினார். எவ்வளவு நேரம் வாக்குமூலம் எழுதப்பட்டது என்பதை குறிப்பாக சொல்ல முடியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், ரகுவேலும் கையெழுத்து போட்டோம். ஹிந்தி ஆசிரியர் கையெழுத்து போட்டாரா என்பது தெரியாது, அவரின் விவரமும் எனக்கு தெரியாது. அந்த வாக்குமூலம் எத்தனை பக்கத்தில் எழுதப்பட்டது என்றால் எத்தனை பக்கம் எனக்கு ஞாபகம் இல்லை. நான் ஒரு பக்கத்தில் கையெழுத்திட்டேன். ஒரே பக்கத்தில்தான் கையெழுத்திட்டேன். அந்த பக்கத்தில் நானும் ரகுவேலும் கையெழுத்து போட்டோம். வேறு நபர்கள் கையெழுத்து போட்டார்களா என எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு பொருட்களை கைப்பற்ற யார் , யார் வந்தார்கள் என்றால் நானும் ரகுவேலும் என் வண்டியிலும், ஜீப்பில் மேற்படி எதிரிகளும் , ஆய்வாளரும் வந்தார்கள். ஆய்வாளரோடு சேர்ந்து வேறு யார் ஜீப்பில் வந்தார்கள் என ஞாபகம் இல்லை. நான் சென்றதாக சொல்லும் இடம் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து ரோட்டை ஒட்டி சுமார் 10 அடி தொலைவில் இருந்தது. பிரேதம் கிடந்த இடத்திலிருந்து 150 மீட்டர் தொலைவில் முள்புதர் இருந்தது. அந்த இடம் முழுவதும் முட்புதர்களாக இருந்தது. குறிப்பாக அடையாளம் எதுவும் சொல்ல இயலாது. நாங்களும் போலிசார் ஒரே நேரத்தில்தான் சென்றடைந்தோம். எந்த இடத்திலிருந்து போலிசார் துணிகளை கைப்பற்றினார்கள் என்றால் செடிகொடிகள் மேலே துணிகள் கிடந்தது. அவ்வாறு இருந்த துணிகளை யார் எடுத்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அவ்வாறு எடுக்கப்பட்ட துணிகளின் நிறம் குறிப்பாக எனக்கு ஞாபகம் இல்லை. அதன் பின்னிட்டு அங்கே கையெழுத்திட்டேன். அதன்பின்பு காவல் நிலையம் சென்று வாக்குமூலம் கொடுக்கவில்லை. நான் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் போலிசார் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் அவர்களிடமிருந்து எந்த வாக்குமூலம்பெறவில்லை என்றாலும் அதன்பின்ட்டு எந்த பொருட்களும் கைப்பற்றவில்லை என்றாலும் போலிசார்கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் , நான் ரகுவேலின் நண்பர்என்பதால் அவர்கேட்டுக் கொண்டதற்காக மகஜர், அத்தாட்சி, ஒப்புதல்வாக்குமூலம் ஆகியவைகளில் நிலையத்தில் வைத்து செய்து விட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை – இல்லை.**</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.23 19:04:26 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.